DINAMANI 2 - MAY 2014

# சங்கரா பல்கலை.யில் 'கேட்' தேர்வுக்கு பயிற்சி

**காஞ்சிபுரம், மே 1:** காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக் கழகத்தில் கேட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்க புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிர்வாகம் ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அப்பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பொறியியல் மாணவர்களுக்கு ஐ.ஐ.டி., என்.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பு தொடரவும், இந்தியன் ஆயில், என்.டி.பி.சி., என்.எல்.சி., ஏர் இந்தியா உள்ளிட்ட பல அரசு மற்றும் அரசு சாரா பன்னாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறவும் வாய்ப்பளிப்பது கேட் தேர்வு.

இத்தேர்வில் பங்கேற்று உயர் மதிப்பெண்கள் பெற இப்போது காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகமும், கேட் ஃபோர்ம் என்ற பிரபல பயிற்சி நிறுவனமும் இணைந்து சிறப்பு பயிற்சி அளிக்கவுள்ளது.

இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சங்கரா பல்கலைக்கழகத்தில் படித்து வரும் மெக்கானிக்கல் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் பிரிவு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் வெளிநாடுகளில் உயர்கல்வி பெற தகுதித்தேர்வாக கருப்படும் ஜி.ஆர்.இ. என்ற தேர்வுக்கான பயிற்சியும் சங்கரா பல்கலைக்கழகத்தில் நடத்தப்படுகிறது.

இந்த இரு பயிற்சி வகுப்புகளையும் அனைத்து பொறியியல் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.